# இலங்கையில் நவீன கல்வியும் கோல்புறூக் விதப்புரைகளும்

வ. ஆறுமுகம்

இலங்கையில் இன்று வழக்கிலுள்ள கல்வியின் இயல்பினையும் போக்கினையும் எண்ணிப் பார்க்கும் எவரும் இந்நாட்டிற்கே உரிய பழைமையான பாரம்பரியமும் நவீன அனுட்டானங்களும் இணைந்திருப்பதை அவதானிக்கலாம். இந்நிலை ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் அளவிலான வளர்ச்சிக்கூடாகத் தோன்றிய கூட்டு மொத்த உருவமாகும். எனினும், இதன் தோற்றத்தில் பல்வகைப்பட்ட கட்டங்களைக் காணலாம். ஆரியர் வருகையுடன் ஆரம்பித்து பௌத்தத்தின் செல்வாக்குடன் உருவம்பெற்ற பண்டைய கல்வி அமைப்பு காலச் சுழற்சியில் நாட்டுக்கு வந்த அந்நியர்களின் பண்பாட்டினாலும் தாக்கம் பெற்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஒவ்வொரு இனத்தவரும் எமது கல்வி வளர்ச்சியில் தத்தம் பங்களிப்பினைச் செய்துள்ளனர். அத்தகைய அம்சங்களின் மொத்த வளர்ச்சியே இலங்கையின் இன்றைய நவீன கல்வியாகும். இதில் கோல்புறூக் ஆணைக்குழுவினரின் விதப்புரைகளுக்கும் விசேட இடம் உண்டு.

## குழுவினர் வருகை

1829 இல் இலங்கைக்கு வந்த கோல்பறூக், 1830 இல் வந்த கமெரென் ஆகிய இருவரும் சேர்ந்து செயற்பட்டமையால் அவ்வாணைக்குழு கோல்புறூக் - கமெரென் ஆணைக்குழு எனப்பெயர் பெற்றது. தீவின் நிதிநிலைமையினைச் சிக்கன அடிப்படையிற் பலப்படுத்தும் நோக்கில் நிதியுட்பட நிர்வாக அமைப்பினையும், நீதிச்சேவை அமைப்பினையும் ஒழுங்குகளையும், பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அவர்கள் முறையே பணிக்கப்பட்டார்கள். கல்வி பற்றிய குறிப்பில் சமய நிலைமையினையும், இங்கிலாந்துத் திருச்சபைக்கும் அதன் சமய நிறுவனங்களுக்கும் அளிக்கப்பட்ட ஆதரவினையும், அத்தொடர்பில் கல்விக்கான ஏற்பாடுகள் பற்றியும், ஒரு தேசிய கல்வி அமைப்புப் பயன்தரும் வகையில் புகுத்தப்படக் கூடிய வழியினையும் கவனத்திற் கொள்ளும்படி குழுவினர் பணிக்கப்பட்டார்கள்.[1] குழுவினரின் அறிக்கை மூன்று பாகங்களாக அமைந்தது. முதல் இரண்டும் முறையே நிருவாகத்தையும் நிதியையும், மூன்றுவது நீதிச் சேவையையும் உள்ளடக்கின. கோல்புறூக் இலங்கையின் கல்வி பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களும் அதற்கு வேண்டிய விதப்

புரைகளும் நிருவாகம் தொடர்பான முதலாவது பாகத்திற் காணப்படுகின்றன.

தமக்கு இடப்பட்ட பணிப்புரையின் பரப்பின் கீழ் கோல்புறூக் நாட்டின் நிர்வாகம், நிதி சம்பந்தமான ஒவ்வொரு கூறுபற்றியும் கருத்துத் தெரிவித்தாலும், சமயம் பற்றிய அம்சத்துக்குக் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. கல்விபற்றி அவர் குறிப்பிட்டுள்ளதும் மேலோட்டமாகவும், அரைகுறையாகவும், அவசரத்திலும் எழுதப்பட்டது போலத் தோன்றுகின்றது[2] அவருடைய கவனத்தில் முக்கிய பங்கினை நிதியும் நிருவாகமும் பெற்றமை இதற்கு ஒரு காரணமாயிருக்கலாம். கல்விக்கும் தாம்கொண்ட பணிக்கும் நேரடியான, நெருக்கமான, தொடர்பினைக் கோல்புறூக் காணுதுவிட்டாலும், அவருடைய விதப்புரைகள் இலங்கையின் கல்வி வரலாற்றில் தமது சுவடுகளைப் பதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தீவின் கல்வி விருத்திக்காக நன்கு திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட ஒன்றிணைந்த திட்டமாக அவற்றைக் கொள்ளமுடியாதெனினும் நீண்டகால நோக்கில் அவற்றின் தாக்கம் நிலையானதென்பது கண்கூடு.

## கல்வி நிலைமை

கோல்புறூக் விதப்புரைகளையும் இலங்கையின் கல்வியில் அவை ஏற்படுத்திய தாக்கத்தினையும் புரிந்துகொள்ள அவர் வந்தபொழுது இருந்த கல்வி நிலைமையினை அறிந்துகொள்வது அவசியமாகும். அன்றிருந்த கல்வி அமைப்பு மூன்று கூறுகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. அவையாவன: அரசாங்கப் பள்ளிக்கூடங்கள், சமயக் குழுப் பள்ளிக்கூடங்கள், தனியார்துறைப் பள்ளிக்கூடங்கள் என்பன. அரசாங்கப் பள்ளிக்கூடங்கள் வகையில் ஒல்லாந்தரது கோயிற்பற்றுப் பள்ளிக்கூட அமைப்பினைப் பின்பற்றி பிரடெரிக் நோர்த் புனரமைத்த வழியில், ருெபேர்ட் பிறவுண்றிக் வலுப்படுத்திய பாடசாலைகள் அடங்கின. அவை கொழும்பிலிருந்து இங்கிலாந்துத் திருச்சபையின் பொதுக் கண்காணிப்பில் இயங்கிவந்தன. வேண்டிய ஒழுங்குமுறையான மேற்பார்வை, நிருவாகம் என்பன இல்லாமையால் அவை செவ்வனே செயலாற்றவில்லை. ஆங்கிலக் கல்வி கொழும்பு அக்கடமியில் மட்டும் வழங்கப்பட்டது. பிறவுன்றிக்கின் காலத்தில் இலங்கைக்கு வந்த ஆங்கில, அமெரிக்க மதக்குழுக்களால் நடத்தப்பட்டு வந்த பாடசாலைகளே மதக்குழுப் பாடசாலைகள் என்ற வகையில் அடங்கின. இவை சமயச் சார்பான கல்வியில் முக்கிய கவனஞ் செலுத்தின. மூன்ருவது வகையான தனியார்துறைப் பாடசாலைகள் அரசிடமிருந்து எவ்வித உதவியும் பெருமல் மாணவரிடமிருந்து அறவிட்ட கட்டணத்தின் மூலம் இயங்கி வந்தன. ஆங்கிலக் கல்வி அளிப்பதையே அவை முக்கியமாகக் கொண்டன. அம்மூன்று வகைப் பாடசாலைகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:-

அட்டவணை I

| பாடசாலை வகை | எண்ணிக்கை | மாணவர் தொகை |
|---|---|---|
| அரசாங்க பாடசாலைகள் | 97 | 1914 |
| மதக்குழுப் பாடசாலைகள் | 256 | 9274 |
| தனியார்துறைப் பாடசாலைகள் | 640 | 8424 |

மூலம்:- T. Ranjit Ruberu, Education in Colonial Ceylon (Kandy: Kandy Printers Limited, 1962) P. 236.

முன்னர் குறிப்பிட்ட பாடசாலை வகைகள் மூன்றையும் விட, போர்த்துக்கேய ஆட்சியின் எச்சங்களாக விளங்கிய உரோமன் கத்தோலிக்கப் பாடசாலைகள் 68 உம், பண்டைய பாரம்பரியக் கல்வியின் சின்னங்களான பௌத்த பாடசாலைகள் 94 உம், நாட்டில் ஆங்காங்கே செயற்பட்டு வந்தன.

தான் அவதானித்த அரசாங்கப் பாடசாலைகள் கோல்புறூக்கிற்குத் திருப்தியை அளிக்கவில்லை. அங்கே சுதேச மொழிகளை எழுதப் படிக்கப் போதிப்பது தவிர வேறேதும் இடம்பெறவில்லையென்றும் அவற்றில் பணிபுரிந்த ஆசிரியர்கள் ஆங்கில அறிவு குன்றியவர்களாக ஆசிரியத் தொழிலுக்குத் தகுதியற்றவர்களாகக் காணப்பட்டார்களென்றும் கோல்புறூக் கருத்துத் தெரிவித்தார்[3] அப்பள்ளிக்கூடங்களில் ஒழுங்கான கட்டுப்பாடும் மேற்பார்வையும் காணப்படாமையால் மாணவர் வரவு பாதிக்கப்பட்டது. சில பெயரளவிலேயே இயங்கிவந்தன. மதக்குழுப் பாடசாலைகளைப் பொறுத்து கோல்புறூக் திருப்தியும் பாராட்டுமே தெரிவித்தார். அக் குழுக்களின் கல்விச் சேவையை இலங்கையர் பெரிதும் கடமைப்பட்டிருந்ததாகக் கருதினார்.[4] அவற்றுடன் ஒப்பிடுகையில் அரசாங்கப் பாடசாலைகள் குறைபாடுடையவையாகவும் திறனற்றவையாகவும்[5] காணப்பட்டதில் வியப்பில்லை.

அரசாங்கப் பாடசாலைகள், மதக்குழுப் பாடசாலைகள் ஆகியன பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் அளவுக்கு அவற்றில் அக்கறை காட்டிய கோல்புறூக் தனியார்துறைப் பாடசாலைகள் பற்றி 'மறந்து' விட்டமை ஆச்சரியத்தைக் கொடுப்பதில் வியப்பில்லை. அப் பாடசாலைகள் இருந்தமைபற்றி ஆணைக்குழு அறிந்திருந்தது என்பது அவர்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளிலிருந்தும் "தீவில் அரசாங்க, தனியார் பாடசாலைகளில் வழமையாகக் கல்விபெற்ற பிள்ளைகள்" பற்றிய குழு அறிக்கைக் குறிப்பிலிருந்தும்[6] தெரிகின்றது. இருந்தும், அப் பாடசாலைகள் பற்றி கோல்புறூக் கருத்துத் தெரிவிக்காதது குறிப்பிடத்தக்கது. ஒருவேளை அவருடைய ஆங்கிலக் கல்வி விருத்தி என்ற நோக்கோடு அத் தனியார்துறைப் பாட

சாலைகளும் இணைந்தால் அவற்றை அங்கீகரித்தமை அவற்றை யொட்டிய மௌனத்தைத் தூண்டியிருக்கலாம்.

இலங்கையிற் குறைந்த அளவிலேனும் ஆங்காங்கு செயற்பட்டு வந்த பௌத்த பாடசாலைகளைப் பற்றி உதாசீனம் செய்யும் போக்கில் கோல்புறூக் தெரிவித்த கருத்து அவருடைய சிந்தனையின் பக்கச் சாய்வினைக் காட்டுகின்றது. பௌத்தப் பாடசாலைகளைப் பற்றிக் குறிப் பிடும் கோல்புறூக் "சுதேசியக் குருபீடத்தினால் அவர்களது கோவில் களிலும் கல்லூரிகளிலும் வழங்கப்பட்ட கல்வி கவனத்திற்கு எடுக்க வேண்டியதன்று" என்று கூறினர்.[7] இவ்வெண்ணம் ஆங்கிலக் கல்வியை அளவுகோலாகக் கொண்டமையால் எழுந்ததே. அரசாங்க சேவைக்கு வேண்டிய ஆட்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஆங்கிலக் கல்விக்கு முதன்மை கொடுத்த அவருக்கு ஏனையவை எல் லாம் 'எடுத்தெறிய' வேண்டியவை ஆயின.

## விதப்புரைகளும் விளைவுகளும்

கோல்புறூக் விதப்புரைகளிற் கல்வி பற்றிய கருத்துக்களை[8] ஆழ்ந்து நோக்கும்போது, அவை அவருடைய விசாரணையின் முக் கிய நோக்கமான நிதி, நிருவாக, சீர்திருத்தங்களின் தேவையை யொட்டிக் கிளர்ந்தெழுவதைக் காணலாம். இக் கருத்தில் கோல்புறூக் கின் கல்விச் சிபார்சுகள் அவற்றின் பயன்பாட்டு நோக்கிலேயே செய்யப்பட்டன எனக்கொள்ளலாம். ஆனல், அவற்றின் மொத்த விளைவு இலங்கையின் நவீன கல்வியமைப்பின் தோற்றத்தில் முடிந் தது என்றல் மிகையாகாது.

தான் கண்ட கல்வியமைப்பைத் திருத்தியமைக்கும் நோக்கில் கோல்புறூக் செய்த சிபார்சுகளில் இலங்கையின் நவீன கல்வி வளர்ச் சித் தொடர்பில் மிகவும் முக்கியத்துவம் பெறுவது அரசுப் பள்ளிக் கூடங்களை நிருவகிப்பதற்கென அவர் எடுத்துரைத்த 'பாடசாலை ஆணைக்குழு' வாகும். அரசாங்க பாடசாலைகளின் வெற்றியின்மைக் குக் காரணமான 'கட்டுப்பாடும் மேற்பார்வையும் இன்மையைப்' போக் கவே அத்தகைய ஒரு சபை அமைக்கப்படவேண்டும் என்றுரைத் தார்.

கொழும்பு அத்தியட்சகுருவின் தலைமையில், மதகுருமார், மாகாண அரசாங்க அதிபர்கள், அரச சேவை நீதிச் சேவை அலுவ லர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு சிறு குழுவாக அது கருக் கொண்டது. அதனுடைய பொறுப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டன வாகக் காணப்பட்டன. அரசாங்கப் பாடசாலைகளை நிருவகித்தல், ஆசிரியர்களை நியமிப்பதற்கு வேண்டிய சிபார்சுகளைச் செய்தல், மற்றும் அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துரைத்

தல் என்பன அதன் கடமைகளாயின. எனினும், மாகாணங்களில் உள்ள பாடசாலைகளை மேற்பார்வைசெய்யும் பொறுப்பு அங்குள்ள அரச அலுவலர்களுக்கு விடப்பட்டபோது பாடசாலை ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் மேலும் குறைந்தன[9] ஆனால் இம்முரண்பாடு 1834 இல் பாடசாலை ஆணைக்குழு நியமிக்கப்பட்டபோது ஆள்பதியினால் நீக்கப்பட்டது. ஆள்பதியின் குறிப்பின்படி ''நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளை மேற்பார்வை செய்வதும் கல்வியின் விரிவாக்கத்திற்கும் திறமையான பாடசாலைகளின் அமைப்பிற்கும் வேண்டிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவதும்'' கொழும்பிலிருந்த பிரதம குழு'வின் கடமையாயிற்று[10]

கோல்புறூக் எடுத்துரைத்த பாடசாலை ஆணைக்குழு இலங்கையின் கல்வி வரலாற்றில் 'புதியதோர் முயற்சி' எனக் கருதமுடியாதெனினும்[11], அதன் முக்கியத்துவம் சிறியதன்று. நமது நாட்டின் கல்வி நிருவாக வரலாற்றில் அதற்குத் தனியிடம் உண்டு ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட 'பாடசாலைச் சபை'யின்[12] வழித்தோன்றல் என அதை அழைக்கலாம். எனினும், அமைப்பு அளவிலும் செயற்பாட்டு முறையிலும் 'பாடசாலைச் சபை'க்குப் 'பாடசாலை ஆணைக்குழு' குறைந்ததாகவே காணப்பட்டது. ஒல்லாந்தரது பாடசாலைச் சபை கால ஓட்டத்தில் மறைந்தது அதனைப் .பின்பற்றியதாகக் கொள்ளக்கூடிய பாடசாலை ஆணைக்குழுவில், ஆங்கிலேயர் காலத்திலிருந்து, தொடர்ச்சியான கல்விநிருவாக வளர்ச்சியின் மூலவேரினைக் காணலாம் என்பது பொருந்தும். அக்குழு காலப்போக்கில் மாற்றங்களுக்குள்ளாயினும், அதன் அடிப்படைத் தத்துவம் இன்று வரைக்கும் இலங்கையின் கல்வியில் நிலைத்துள்ளது. நாட்டின் நவீன கல்வி வரலாற்றில், கல்வி நிருவாகம் ஒரு மத்தியப்படுத்தப்பட்ட நிறுவன ரீதியிலான ஒழுங்கில் அமைந்துள்ளதென்றால், அதன் தொடர்ச்சியான வளர்ச்சியினைப் பாடசாலை ஆணைக்குழுவிலிருந்து காணலாம்

கோல்புறூக் விதப்புரைகளில், இலங்கையின் நவீன கல்வி வரலாற்றில் தாக்கத்தை ஏற்படுத்திய பிறிதொரு அம்சம் ஆங்கிலம் பற்றியதாகும். கோல்புறூக் குழுவினரின் வருகை நம் நாட்டில் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் ஒரு புதிய போக்கினைப் புகுத்துவதைக் காணலாம். ஆங்கிலக் கல்வியானது பிரித்தானிய ஏகாதிபத்திய நோக்கினை நிறைவேற்றி, தேக்கநிலையில் காணப்பட்ட ஆசிய சமுதாயங்களைச் சீர்திருத்தி, கீழைத்தேய மக்களின் அறிவியல், ஒழுக்கவியல் உயர்வுக்கு உதவும் என்று குழுவினர் நம்பினர் என எண்ணக்கிடக்கின்றது.[13]

பிரித்தானிய ஏகாதிபத்திய நோக்கு அத்திசையிற்றான் செயற்பட்டது என்பதற்குச் சமகால இந்தியாவில், வங்காளத்தில், மக்

கோலே வெளியிட்ட கருத்துக்கள் சான்றாக அமைகின்றன. 1835 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குரிய தமது குறிப்பில் (Macaulay's Minute, February 1835) ஆங்கிலத்தின் சிறப்பினைப் பற்றியும் அதன் அவசியத்தைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவருடைய கருத்தில் ஆங்கிலம் ஒரு தொடர்புமொழி மட்டுமல்லாமல், ஓர் உயர்ந்த நாகரிகத்தின் ஊற்றாகவும், சமூகப் பொருளாதாரப் பெயர்ச்சியின் ஊடகமாகவும், சமய மாற்றத்தின் கருவியாகவும் விளங்கியது.[14] ஆங்கிலக் கல்வியை விருத்திசெய்வதன் மூலம் ஆங்கிலேய அரசுக்கு விசுவாசமுள்ள ஓர் ஊழியர் கூட்டத்தையும், நிறத்தாலும் இரத்தத்தாலும் வேறுபட்டாலும் செயலாலும் சிந்தனையாலும் ஆங்கிலேயராக விளங்கும் ஒரு சமூகத்தையும் உருவாக்குவது ஏகாதிபத்திய வாதிகளின் நோக்கமாக அமைந்தது.

அவ்வழியிற் செயற்பட்டமையால், அன்று நிலவிய சிங்கள, தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் சமகாலத் தேவைகளுக்குப் போதிய கல்வியை அளிக்கவில்லை என்று கோல்புறூக் குழுவினர் சிந்தித்தது வியப்பிற்குரியதன்று.[15] அதன் விளைவாக, ஆங்கிலக் கல்வியை விருத்திசெய்வதற்குவேண்டிய பல விதப்புரைகளைக் கோல்புறூக் எடுத்துரைத்தார். அவற்றுள் ஒன்று கொழும்பில், தரமான உயர்கல்வியை அளிப்பதற்கென, ஒரு கல்லூரி நிறுவப்படவேண்டும் என்பதாகும். அங்கு ஆங்கிலத்துக்கென ஒரு பேராசிரியப் பதவி நிறுவப்படவேண்டும் என்ற அவருடைய கருத்தைப்[16] பார்க்கையில், அவர் கருதிய 'கல்லூரி' பல்கலைக்கழக மட்டத்திலானதாக இருக்க வேண்டும் என அவர் எண்ணியதாகத் தோன்றுகிறது. அக் கல்லூரி கோல்புறூக்கின் நிருவாகத் திருத்தங்களுக்கு ஒருவகையில் உதவுவதாக அமைந்தது. அதுகாலவரைக்கும் அரசாங்கசேவையின் உயர் மட்டத்தில் சேருவதற்குரிய வழி பிரித்தானியப் பல்கலைக்கழகங்களில் அரசுச் செலவில் பெற்ற கல்வியாகவே இருந்தது (ஒல்லாந்தரும் அப்படித் தெரியப்பட்ட சிலருக்கு 'லெய்டன்' பல்கலைக் கழகத்தில் பயிற்சியளித்தது சிந்திக்கற்பாலது). சுதேசிகளைத் தெரிந்து இங்கிலாந்துக்கு அனுப்பிப் பயிற்சியளிப்பது வீண் விரயம் என்ற கருத்தில் அதற்கு வேண்டிய கல்வியை இலங்கையிலேயே பெறச் செய்ய வேண்டும் என்பது அவர் எண்ணம். 1836 இல் நிறுவப்பட்ட கல்லூரி அவர் கருதிய அம்சங்கள் சிலவற்றைக் கொண்டிருந்தாலும், அவருடைய எண்ணத்தில் இடம்பெற்ற வகையிலான உயர் கல்வி நிறுவனம் 1921 இல் அமைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலேயே உருவாகியது.

நாட்டு மக்களிடையே ஆங்கிலக் கல்வியில் நாட்டத்தை வளர்க்கும் நோக்கில் அரசாங்க சேவை - உயர்மட்டம் உட்பட - சுதேசிகளுக்கும் இடமளிக்கவேண்டும் என்ற சிபார்சு செய்யப்பட்டது. அதனை அடுத்து, நாட்டிலுள்ள சுதேசிய அரசாங்க அலுவலர்கள்

ஆங்கில அறிவுடையோராய் இருத்தல் அவசியம் என்ற கூற்றும்[17], அரசாங்க சேவையில் சேரவிரும்புவோர் ஆங்கிலத்தைக் கற்கவேண்டிய தேவையைக் கட்டாயப்படுத்தியது. அக் கொள்கையின் வளர்ச்சியே இலங்கையில் ஆங்கிலம் அரசகரும மொழியான நிலைமையாகும் அரசகரும மொழியாக ஆங்கிலம் பெற்ற உயர்வு, நாடு சுதந்திரம் பெறும்வரைக்கும், நிலைபெற்றிருந்தமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

கல்வியிலும், அரசாங்க சேவையிலும், ஆங்கிலத்துக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் ஆசிரிய நியமனத்திலும் எதிரொலித்தது. அன்று ஆசிரியர்களாகக் கடமையாற்றியோரில் பெரும்பான்மையினர் ஆங்கில அறிவற்றவர்களாகக் காணப்பட்டமையால், ஆசிரியர்கள் அனைவரும் ஆங்கிலத்தின் மூலம் கல்வியளிக்கக் கூடிய முறையில் ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருக்கவேண்டுமெனக் குழு எடுத்துரைத்தது.[18] ஆங்கில ஆசிரியர்களின் பற்றுக்குறையைத் தீர்க்குமுகமாக அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியோரைப் பயன்படுத்தலாம் எனவும் குழு கருதியது. அத்துடன், கொழும்பில் இயங்கிவந்த அரசாங்க 'செமினரி' நாட்டின் பாடசாலைகளுக்கு வேண்டிய ஆற்றலுடைய ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் கூறினர்[19].

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவமும், ஆங்கிலம் மூலம் கல்வியின் விருத்தியும் அம்மொழியைத் தெரிந்தவர் மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்கப்படவேண்டும் என்ற நிலைமையும், சுயமொழி மூலப் பாடசாலைகளின் தொடர் வளர்ச்சிக்குக் குந்தகமாக அமைந்தன. ஆங்கிலத்துக்குக் கிடைத்த பெருமதிப்பு மக்களிடையே அதன்பால் நாட்டத்தை வளர்த்தது ஆங்கிலக் கல்வி சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்று மக்கள் கருதினர்.[20] கூட்டு மொத்தமாக, அரசுக்கொள்கை, மக்கள் நாட்டம், எல்லாம் சுயமொழிப் பாடசாலைகளை ஆங்கிலப் பாடசாலைகளாக மாற்றின. அரசு காட்டிய வழியில், கிறித்தவ மதக்குழுப் பாடசாலைகளும், வேறு வழியின்றி, சென்றதைக் காணலாம்.[21]

மேலே காட்டியபடி கோல்புறூக் முன்வைத்த "அக்கருத்துக்கள் இலங்கையில் ஆங்கிலக் கல்வியின் நிலைக்கு அடித்தளமாக அமைந்தன. அது தொடர்பான அரசுக் கொள்கையாக்கத்துக்கும் அவை அச்சாணியாகவும் செயற்பட்டதைக் காணலாம்".[22] கோல்புறூக்கின் விதப்புரைகள் இலங்கைக் கல்வியில் மொழிக் கொள்கைப் பாதையினை வகுப்பனவாய் விளங்கின. அவற்றின் வழியிலேயே ஆங்கிலம் கல்விமொழி என்ற அரசுக் கொள்கை தோன்றியது.[23] இவ்விதம் இலங்கையில் இடம்பெற்ற ஆங்கிலம், நாட்டின் வரலாற்றில் — கல்வியிலும் அரசியலிலும் — பெரும் ஆதிக்கத்தைச் செலுத்தி

யது. இலங்கையின் நவீன கல்வி வரலாற்றில், சுதந்திரம் அடைந்த பின்னரும், ஆங்கிலக் கல்வி செலுத்திய, செலுத்துகின்ற, செல்வாக்குச் சமகாலத்துடன் சங்கமித்துவிட்ட ஒன்றாகும்.

கோல்பறூக் விதப்புரைகளில், எமது நாட்டின் நவீன கல்வி வளர்ச்சியில் தனது அடிச்சுவட்டினைப் பதித்த இன்னொரு விதப்புரை கிறீத்தவ மதகுழுக்கள் பற்றியதாகும். அம் மதக்குழுக்களின் கல்விப் பணி பற்றி, சிறப்பாக அமெரிக்க மதக்குழுவினரின் பணிபற்றி, கோல்புறூக் போற்றிப் பேசுவதையே காணலாம்.[24] அவர்களுடைய முயற்சிகளை மேலும் ஊக்குவிப்பதாகக் கோல்புறூக் விதப்புரை அமைந்தது. கிறித்தவ மதக்குழுக்கள் ஏற்கெனவே பாடசாலைகளை அமைத்த இடங்களில் அரசாங்கப் பாடசாலைகளை அமைக்கவேண்டியதில்லை என அவர் கூறினூர்[25]. இந்த விதப்புரை நாட்டின் பாடசாலை அமைப்பில் காலப்போக்கில் நிலைபெற்ற பாடசாலை வகைகளுள் ஒன்றுன மதச்சார்புப் பாடசாலை 'Denominational School' க்கு வித்திட்டது.

அரசாங்கப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாத, கிறீத்தவ மதக்குழுக்களின் செல்வாக்கு நிலைத்துவிட்ட, இடங்களில் கல்வியில் ஏகபோக உரிமையும் கட்டுப்பாட்டு அதிகாரமும் அம்மதக்குழுக்களின் வசமாயின.[26] அவற்றின் வளர்ச்சியும், பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியின் பயனைத் தோற்றமெடுத்த, சுதேசிய மதப்பிரிவுகளின் பாடசாலைகளின் வளர்ச்சியும் இணைந்து உருவெடுத்ததே மதச்சார்புப் பாடசாலை வகையாகும். 1960 ஆம் ஆண்டில் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் சட்டம் நடைமுறைக்கு வரும்வரைக்கும் மதச்சார்புப் பாடசாலை வகை நமது கல்வியமைப்பின் ஆணிவேராகத் திகழ்ந்தமை எல்லோரும் அறிந்ததாகும்.

மதக்குழுப் பாடசாலைகளின் வளர்ச்சிக்குத் தமது கருத்துரைகளின்மூலம் ஆசீர்வாதங்களை வழங்கிய கோல்புறூக் தனியார் துறைப் பாடசாலைகள் பற்றிய தமது 'மௌனத்தின்' மூலம் அவற்றின் வளர்ச்சிக்கு வழிவகுத்தார் என்று கொள்ளுதல் பொருந்தும். சுயமொழிப் பாடசாலைகளின் மூடுதலுக்குக் காலாக இருந்த கோல்புறூக், தனியார்துறைப் பாடசாலைகளைப் பற்றி (முன்னரே குறிப்பிட்டது போல) மௌனம் சாதித்தபோது அவற்றின் தொடர்ச்சியை அவர் அங்கீகரித்தார் என்றே கொள்ளுதல் வேண்டும். அத் தனியார் துறைப் பாடசாலைகளும், மதச் சார்ப்புப் பாடசாலைகளும், அரசாங்கப் பாடசாலைகளும் சேர்ந்த மூவகைப் பாடசாலைகளின் வளர்ச்சி கோல்புறூக் விதப்புரைகளின் காலத்திலிருந்து கணிக்கத்தக்கது.

தொகுத்துப் பார்ப்பின், கோல்புறூக் ஆணைக்குழு தெரிவித்த கல்விசார் கருத்துக்களும் முன்மொழிந்த ஆலோசனைகளும் இலங்

கையின் கல்வி வரலாற்றில் ஓர் எல்லைக் கல்லாக அமைகின்றன என்பது ஏற்புடைத்தாகும். கோல்புறூக் இலங்கைக்கு வந்த நோக்கத்துக்கும், அதை நிறைவேற்ற அவர் கையாண்ட வழிமுறைகளுக்கும் உகந்தவையாகவே அவர் தெரிவித்த கல்விசார் கருத்துக்கள் காணப்படுகின்றன. கல்விநோக்கில் மட்டும் பார்ப்பின், நாம் எதிர் பார்க்கக்கூடிய தாராண்மையோ அல்லது மனிதாபிமானமோ அவற்றில் தென்படாமல் இருக்கலாம். ஆனால், கோல்புறூக் ஒரு கல்வியாளர் அல்ல என்பதையும் அவர் ஒரு நிருவாகியே என்பதையும் மனதில் வைத்தே அவரை மதிப்பிடுதல் பொருந்தும் என்பதையும் மறத்தல் கூடாது. வரலாற்று ஆசிரியர்கள் கொள்வதுபோல, கோல்பறூக் - கமெறென் விதப்புரைகள் பண்டைய இலங்கையையும் நவீன இலங்கையையும் பிரித்துக் காட்டும் எல்லைக்கோடாக அமைகின்றன [27] கோல்பறூக்கின் கல்விசார் கருத்துக்களும் இலங்கையின் கல்வி வரலாற்றில் அவ்வண்ணம் மதிக்கத்தக்கன எனலாம். நவீன காலத்தைக் கட்டியெழுப்பிய காலவோட்டத்தில் அக்கருத்துக்களுக்கு அழியாத இடம் அமைந்துவிட்டது.

## குறிப்புக்கள்


1. The Colebrooke - Cameron Papers, selected and edited by G. C. Mendis, Oxford University Press, 1956, I, pp. 4–8.
2. Ibid, pp. 71–75.
3. The Colebrooke Commission Report, 24 Dec. 1831 p. 31.
4. Ibid.
5. Ibid.
6. பார்க்க. T. Ranjit Ruberu, Education in Colonial Ceylon, Kandy: Kandy Printers Limited, 1962, p. 257.
7. Ibid. Also, Colebrooke - Cameron Papers, op. cit, pp. 74–75.
8. See – The Colebrooke Commission Report; Colebrooke - Cameron Papers, op. cit. pp. 71–75; Ruberu, op. cit especially pp. 248 - 257; and K. H. M. Sumathipala, History of Education in Ceylon, Dehiwala: Tissa Prakasakayo, 1968, pp. 5 - 8.
9. Ruberu, op. cit. p. 249
10. Ibid
11. Ibid
12. பாடசாலைச் சபை பற்றிய விபரங்கட்குப் பார்க்க Rnberu, op. cit. p. 37
13. Zeylanicus, Ceylon between Orient and Oceident, London: Elek Books Limited, 1970, p. 97.

14. Gostha Behari Kanungo, The Language Controversy in Indian Education. An historial study. Chicago: University of Chicago, Comparative Education Center, 1962, p. 26.
15. G. C. Mendis, Ceylon Under the British, Colombo: Colombo Apothecaries Co Ltd., 1944, p. 34.
16. Colebrooke Commission Report, p. 32
17. Ibid. pp. 29 – 30.
18. Ibid. p. 31.
19. Ibid. p. 32.
20. Ruberu op. cit. p. 253.
21. Ibid, p. 251.
22. வ. ஆறுமுகம் ''பத்தொன்பதாம் நூற்ருண்டில் இலங்கைக் கல்வியில் ஆங்கிலத்தின் ஆதிக்கம்'', கலைஞானம், யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்விக்கழக வெளியீடு, 1980 - 81. ப. 30.
23. மேற்படி.
24. Ruberu, op. cit p. 140
25. Colebrooke Commission Report, p. 32
26. Ruberu, op. cit., p. 254.
27. W. M. K. Wijetunga, Sri Lanka in Transition, Colombo: Wesley Press, 1974, p. 54.